புதிய அவையம்

**Vol. 09, Issue – 02, December - 2025**

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

# வேலூர் மாவட்டம் , பேர்ணாம்பட்டு வட்டத்தில் உள்ள பாலூர் திரௌபதி அம்மன் கோயிலும் கலைசார் நிகழ்வுகளும்

**முனைவர் கி.பார்த்திபராஜா,**
**நெறியாளர் மற்றும் தமிழ்த் துறைத்தலைவர்,**
**தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,**
**தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),**
**திருப்பத்தூர் - 635601.**

**து.சுமதி,**
**முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,**
**தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),**
**திருப்பத்தூர் - 635601 .**

**திருவள்ளுவர்பல்கலைக்கழகம்-சேர்க்காடு.( இணைவுபெற்றது )**

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைய தமிழர்கள் தெய்வ நம்பிக்கை கொண்டு வாழ்ந்து வந்தார்கள் இந்தநம்பிக்கையின் அடிப்படையில் தான் வழிபாடு தோன்றியது . அப்படித் தோன்றிய முதல் வழிபாடு இயற்கை வழிபாடு ஆகும் . . இயற்கை வழிபாட்டைத் தொடர்ந்து நடுகல் வழிபாடு தோன்றிது . .தமிழ்நாட்டில் வன்னியர் மக்களின் முக்கிய வழிபாடு திரௌபதி அம்மன் வழிபாடாகும் . வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு வட்டத்தில் உள்ள பாலூர் திரௌபதி அம்மன் கோயிலில் நடைபெறுகின்ற கலை நிகழ்ச்சிகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும் .

**குறிச்சொற்கள்**

திரௌபதி அம்மன், பங்குனி உத்திராடம், அர்ச்சுனன் தபசு, மகாபாரதம், காவடி எடுத்தல்

## முன்னுரை;

தொல்பழங்காலத்தில் நாடோடிகளாய் அலைந்த மனித சமூகம் இயற்கையின் சீற்றங்களை கண்டு அஞ்சியது . இதன் காரணமாகவே இவர்களுள் இயற்கையை வழிபடும்

வழிபாட்டு முறைகள் தோன்றியிருக்கக்கூடும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். இயற்கைக்கு , உருவம் கொடுத்து வழிபடும் தெய்வ வழிபாடுகள் பிற்காலத்தில் தோன்றலாயின . வழிபாடுகள் மக்களிடையே பரவின . இறந்தவர்களைத் தெய்வமாகக் கருதி வழிபடும் ஆவி வழிபாடே முதலில் தோன்றியது என்பர் . போரின்கண் உயிர்நீத்த வீரர்களுக்கு நடுகல் எடுக்கப்பட்டு வழிபடும் வழக்கம் குறித்துத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. ." இறந்தவர்கள் நினைவாக நடப்பட்ட கற்களை 'நடுகல்' என்று குறிப்பர் .வீரத்தின் நினைவைப் போற்றும் வகையில் வீரர்களின் உடலைக் கற்கள் கொண்டு மூடி நடப்பட்ட கற்கள் நடுகல் எனப்பட்டன-1" .

இராமாயணம் , மகாபாரதம் இதிகாசங்களின் வழி சில தெய்வங்களை மக்கள் வழிபடலாயினர்.இந்த " தெய்வங்கள் கையில் ஆயுதங்களாகவும் , தெய்வ வடிவமாகவும் வளர்ச்சி பெற்று வழிபடலாயின-2".இதில் முக்கிய வழிபாடாகக் கருதப்படுவது தமிழ்நாட்டில் திரௌபதி அம்மன் வழிபாடாகும் . பல இடங்களிலும் திரௌபதி அம்மன் வழிபாடு மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது .வேலூர் மாவட்டம் பேர்ணாம்பட்டு வட்டம் பாலூர் பகுதியில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் வழிபடும் தெய்வமாக திரௌபதி அம்மன் வழிபாடு விளங்குகிறது.பாலூர் பகுதியில் வாழும் வன்னியர்களின் குல தெய்வமாகவும் திரௌபதி அம்மன் உள்ளது.

**திரௌபதி அம்மன்;**

திரௌபதி அம்மன் வழிபாடு தமிழகத்தில் வட மாவட்டங்களிலும் , புதுச்சேரியிலும் அதிகமாக உள்ளது."மகாபாரதத்தில் வரும் பாஞ்சாலி என்கிற பெண்ணே திரௌபதி அம்மன் ஆவார் .திரௌபதி சாதாரணப் பெண் அல்ல , அவள் தீயில் பிறந்தவள் . பஞ்ச பூதங்கள் என்று சொல்லப்படும் நிலம் , நீர் , நெருப்பு , ஆகாயம் , காற்று ஆகியவற்றின் தலைவி வீர பாஞ்சாலி என்று போற்றப்பட்டு திரௌபதி அம்மனாக வழிபடுகிறார்கள்-3". இத்தனை சிறப்புப் பெற்றது திரௌபதி அம்மன் ஆகும் .

**கோயில் அமைப்பு ;**

வேலூர் மாவட்டம், பேர்ணம்பட்டு வட்டம் ,பாலூர் திரௌபதி அம்மன் கோயில் தேசிய நெடுஞ்சாலையில்(ஆம்பூர் முதல் பேர்ணம்பட்டு) கிழக்குத் திசை நோக்கி அமைந்துள்ளது. கோயிலின் நுழைவாயிலின் இருபக்கங்களிலும் காவல் தெய்வமாகிய போர்த்து ராஜா சுதை உருவமாகக் காட்சியளிக்கிறார். கோயிலின் நீளம் 65 அடி , அகலம் 22 , உயரம் 50 அடி கோயிலின் சுற்றுப்புறச் சுவர்கள் மீது பாண்டவர்கள் சிலை வைக்கப்பட்டுள்ளன .திரௌபதி அம்மன் கோயிலுக்கு அருகில் தேசிய நெடுஞ்சாலைக்குப் பக்கத்தில் வலது புறத்தில் சிறுதெய்வங்களான பாட்டை சாரதியம்மன் கோயிலும் , இடது புறத்தில் நாகதேவதை

கோயிலும் அமைந்துள்ளது.ஒரு சில இடத்தில் கோயில் இல்லாமல் இருப்பதையும் , மக்கள் ஒரு சில இடங்களில் கோயில் அமைத்து வழிபட்டு வருகிறார்கள்- [4]".

**பாலூர் மேல் பகுதி;**

மேல் பகுதி வன்னியர் மக்கள் வாழும் பகுதியாகும். இதன் வடக்குப் பக்கம் ஓணான் குட்டை ஊர் வன்னியர் மக்கள் வாழும் பகுதியாகும். தெற்கே கொத்தூர் இது நாயுடு , வாணி செட்டியார்கள் மற்றும் மந்திரிகள் ஆகிய பிரிவை சேர்ந்த மக்கள் வாழும் பகுதியாகும் . கிழக்குப் பகுதியில் ஆதிதிராவிடர் , தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள்.

**கலைசார் நிகழ்வுகள் ;**

பாலூர் பாட்டை சாரதியம்மன் , கெங்கையம்மன் இந்த இரண்டு சிறுதெய்வ கோயிலுக்கு அருகில் திரௌபதி அம்மன் திருவிழா நடைபெறும்போது இந்த இரண்டு சிறுதெய்வ கோயிலுக்கு அருகில் தான் துரியோதனின் படுகளப்போர் நடைபெறுகிறது. மொத்தம் 48 நாட்கள் மகாபாரதம் மற்றும் தெருக்கூத்து நடைபெற்று வந்தது.கால மாற்றத்தின் காரணமாகத் தெருக்கூத்து 15 நாட்களாகச் சுருங்கி உள்ளது . படுகளபோர்க்காட்சி காலை 8 மணி முதல் 12 மணி வரை. ஏறத்தாழ ஐந்து மணி நேரம் நடைபெற்றது .இந்த நிகழ்வில் துரியோதனன் வேடம் தரித்தவர் , வீமன் வேடம் தரித்தவர்ஆகிய இருவருக்கும் போர் நடைபெறுவதாக பாவனை செய்யப்படுகிறது. . அன்று இரவு தீமிதி விழா , கோலாட்டம் ,அரவாணிகளின் நடனம் , வான வேடிக்கை ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறன.

**பாலூர் திரௌபதியம்மன் திருவிழா ;**

தமிழ் மாதம் சித்திரை-1 ஆங்கில மாதம் ஏப்ரல் 14–04-2025 அன்று காலை 7.00 மணிக்கு மேல் 10 மணிக்குள்ளாகக் காப்புகட்டுதல் , கொடியேற்றும் விழா நடைபெறுகின்றன . தினந்தோறும் இரவு 7.00 மணிக்கு மேல் 9.00 மணிக்குள்ளாக மகாபாரத சொற்பொழிவு நடைபெற்றது. சித்திரை -10 ம் தேதி ஏப்ரல் மாதம் 23–04-2025 அன்று இரவு 7.00 மணிக்கு பாலூர் ஸ்ரீ திரௌபதியம்மன் நாடக சபாவினர் நடிக்கும் துரியோதனன் படுகளம் நாடகம் நடைபெற்றது. நாடக சபாமேனேஜர் கே.ரவி கவுண்டர், நாடக ஆசிரியர் டி. மனோகரன் கவுண்டர் முன்னிலையில் சித்திரைமாதம் 11-ம்தேதி ஏப்ரல் 24-04-2025 அன்று காலை 9.00 மணிக்கு துரியோதனன் படுகளம் .மாலை 4.00 மணிக்கு தீமிதி விழா அக்கினி வசந்த விழா நடைபெற்றது . இரவு 8.00 மணிக்கு மகா அன்னதானம் வழங்கும் நிகழ்வு ஆகும். சித்திரை மாதம் 12-ம் தேதி ஏப்ரல் 25-04-25 அன்று காலை 9.00 மணிக்கு ஸ்ரீ தர்மராஜா சுவாமிக்கு பட்டாபிஷேகம் நடைப்பெற்றது. சித்திரை 7-ம்தேதி ஏப்ரல் 20-04-2025 அன்று மாலை 6.00 மணிக்கு மேல் ஸ்ரீ திரௌபதியம்மன் திருக்கல்யாணம் நடைபெற்றது. இந்த தகவல்கள் அனைத்தும் ஆய்வாளர். கள ஆய்வு மேற்கொண்டபோது கிடைத்ததகவல்கள் ஆகும்."வன்னியர் மக்களின் குலதெய்வம் திரௌபதி அம்மன் ஆவார்.இவர் ஊர்

காப்பவராகவும்,குல தெய்வமாகவும் திரௌபதி அம்மனை அம்மக்கள் வழிபாடு செய்து வருகிறார்கள்[5].

**பங்குனி உத்திராடம், அர்ச்சுனன்தபசு ;**

பங்குனி உத்திராடம் அன்று இரவு தெருக்கூத்து சுமார் 10 மணி அளவில் அர்ச்சுனன் தபசு நடைபெற்றது. அதில் அர்ச்சுனன் சிவனிடம் பாசுபாதஸ்திரம் வேண்டிச் செல்கிறான்.செல்லும் வழியில் இரண்டு ஏலக்கன்னிகள் அர்ச்சுனன் தவத்தை கலைக்க வழி மறைத்து நிற்கின்றார்கள் . தபசு மரத்தடியில் சிவன் , பார்வதி வேடம் தரித்த இருவரும் வேடர்கள் போல் மாறு வேடத்தில் வந்து அர்ச்சுனன் தவத்தை கலைக்க பல முயற்சி செய்கிறார்கள்.அந்தச் சோதனையை வென்று அர்ச்சுனன் மீண்டும் சிவ பெருமானை நோக்கி பாசுபாதஸ்திரம் வாங்கச் செல்கிறான்.

**மகாபாரதம்;**

திரௌபதி அம்மன் கோயில் திருவிழா அன்று ஒவ்வொரு நாளும் மகாபாரதம் நடைபெறுகின்றன . பதினெட்டு நாள் பாரதபோர் பற்றிய சொற்பொழிவு நடைப்பெறுகிறது. இரவும் , பகலில் நடந்த சொற்பொழிவு அன்று இரவு தெருக்கூத்து நாடகமாக நடித்துக் காட்டப்படுகிறது. மொத்தம்18 பருவங்கள் ஒவ்வொரு பருவத்திற்கும் பாரதம் ஓதும் பிரசங்கி ஒவ்வொரு விளக்கம் கூறுகிறார்.

**காவடி எடுத்தல் ;**

ஆடி மாதம் முதல் நாள் அன்று திருத்தணிக்கு செல்கிறார்கள் .இதன் தொடக்ககால பூஜையாக இடும்பன் பூஜைபோடுகிறார்கள் . இப்பூஜை பெருந்தெய்வ கோயிலான சிவன் கோயிலில் காவடி வைத்து முதலில் இடும்பன் பூஜை போடுகிறார்கள் .பின்பு ஒவ்வொரு வரும் மீண்டும் குளித்து முடித்து காவடியைத் தொழுது தங்கள் தோள் மேல் காவடியை தூக்கிக் கொண்டு புறப்பட்டு பக்கத்தில் உள்ள ஸ்ரீ சாமூண்டீஸ்வரி கோயிலுக்குச் சென்று பூஜை போடுகிறார்கள். பின்பு ஊர் முழுக்க சுற்றி சென்று பின்பு திரௌபதி அம்மன் கோயில் அருகில் வைத்து அனைத்து காவடிகளுக்கு பூஜை செய்து திருத்தணிக்குச் செல்கிறார்கள் **.**

**முடிவுரை ;**

நவீன காலத்தில் கிராமியக் கலைகள் அழிந்து வருவது யாவரும் அறிந்த ஒன்றாகும் . பாலூர் கிராமமக்கள் இன்றளவும் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளை அழியாமல் பாதுகாத்து வருகின்றார்கள். திருவிழாவின் போது நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் கரகாட்டம் ,

ஒயிலாட்டம், பொய்கால் குதிரை , வானவேடிக்கை ,மயிலாட்டம் , கோலாட்டம் , சிலம்பாட்டம் , சாமியாட்டம் ஆகியவை ஆகும் .

**தகவலாளர்கள்;**

1 .குமரன்,கட்டிடத் தொழிலாளி,வயது – 48 , படிப்பு 9-ம்வகுப்பு --9080530155

2 .தனலட்சுமி, கூலிவேலை,வயது -- 55 , படிப்பு இல்லை . -- 9944471103

3 .லட்சுமி, கூலிவேலைவயது – 60 , படிப்பு இல்லை, அலைபேசி இல்லை .

4.சின்னபையன், கூலிவேலை செய்பவர்,வயது – 60 படிப்புஇல்லை – 99437718015 .

5 .கண்ணதாசன்,பால் வியாபாரம் செய்பவர்,வயது—48 படிப்பு 10 – ம்வகுப்பு

**மேற்கோள்நூல்கள் ;**

1 .இலக்கிய பார்வையில் – சங்ககாலத் தொல்லியல் பா . அருண்ராஜ் ப . எண் - 51

2 .தெய்வங்களும் சமூகமரபுகளும் – தொ.பரமசிவன் ப . எண்– 12

3 .கிராம தெய்வங்கள் – பிரம்மஸ்ரீ .வேணு சீனிவாசன் ப . எண் - 9,10

4 . 5 புதுவை நாட்டுப்புறவியல் ஓர்அறிமுகம் -ஆ . திருநாகலிங்கம் ப . எண் -97

**துணைநூல்பட்டியல் ;**


1 .இலக்கிய பார்வையில் – சங்ககாலத் தொல்லியல் பா . அருண்ராஜ்
முதற் பதிப்பு 2023 ,
வெளியீடு பரிசல் புத்தக நிலையம்,
சென்னை .

2 .தெய்வங்களும் சமூகமரபுகளும்- தொ.பரமசிவன்
முதற் பதிப்பு பிப்ரவரி 2022 ,
வெளியீடு காலச் சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லட்.,
நாகர் கோயில் 629001 .

3 .கிராம தெய்வங்கள் – பிரம்ம ஸ்ரீ .வேணு சீனிவாசன்
முதற் பதிப்பு டிசம்பர் 2025,
வெளியீடு சத்தியா எண்டர் பிரைஸ் ,
சென்னை– 600094 .

4 .5 புதுவை நாட்டுப்புறவியல் ஓர்அறிமுகம் -ஆ . திருநாகலிங்கம்
முதற் பதிப்பு செப்டம்பர் 2023,
செல்வி பதிப்பகம்.